

மதுரை மாவட்டம், அலங்காநல்லூரில் உள்ள ஜல்லிக்கட்டு அரங்கம் அமைக்கும் பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார்.




கழக இளைஞரணி 2வது மாநில மாநாடு சேலத்தில் நடைபெறுவதையொட்டி கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி தொழுதூரில் இருசக்கர வாகனப் பேரணியை மாவட்டக் கழக செயலாளர்கள் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் வரவேற்று கடலூர் மேற்கு மாவட்டத்திற்காக தொடங்கி வைத்தனர். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### 1000 மாணவர்கள் – இளைஞர்களுக்கு

# தொழில் முனைவோர் மேம்பாடு - புத்தாக்க பட்டயப்படிப்பு!

## விரைவில் தொடங்கப்படும் என அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

சென்னை, நவ. 26 - 1000 மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க பட்டயப் படிப்பு விரைவில் துவங்கப்படும் என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் சென்னை அண்ணாப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் புதிய கண்டுப்பிடிப்புகளுக்கு பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் புத்தாக்க தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 25 மாணவக் குழுக்களுக்கும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 30 மாணவக் குழுக்களுக்கும் என 55 புதிய கண்டுபிடிப்புக்களுக்கு ரூ.32 லட்சத்து 50 ஆயிரம் நிதி உதவி அமைச்சர் தா.மோ. அன்பரசனால் வழங்கப்பட்டது.

விழாவில் அமைச்சர் பேசியதாவது:

“இன்று இந்த விழாவில், புத்தாக்க தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 25 மாணவ குழுக்களுக்கும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்30மாணவக் குழுக்களுக்கும் என 55 புதிய கண்டுபிடிப்புக்களுக்குரூ. 32 லட்சத்து 50 ஆயிரம் நிதி உதவி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த பரிசுகளை பெறும் மாணவர்கள் இளைஞர்களுக்கு என் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். வேக, வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றைய விஞ்ஞான உலகில் பையோ டெக்னாலேஜி. நானோ டெக்னாலேஜி, ரோபோடிக்ஸ் ஏ.ஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகள் உருவாகினாலும், நாம் மற்ற உலக நாடுகளுடன் போட்டி போடுவதற்கு புதிய புதிய கண்டுப்பிடிப்புகள் அவசியம் அத்தகைய புதிய கண்டுடிப்பிடிப்புகளை உருவாக்கிட தமிழ்நாட்டில் உள்ள புத்தாக்க சிந்தனை கொண்ட இளைஞர்களை கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்திட தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

புத்தாக்க சிந்தனைக் கொண்ட நம் இளைஞர்களையும், மாணவர்களையும் ஊக்கப்படுத்திடEDIIநிறுவனம்மூலம் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 26 ஆயிரத்து 410 இளைஞர்களுக்கும், ஊரக வளர்ச்சி, தகவல் தொழில் நுட்பம், தாட்கோ, மாவட்ட தொழில் மையம் போன்ற அரசு துறைகளுடன் இணைந்து13ஆயிரத்து 764 இளைஞர்களுக்கும், புத்தாக்க தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3 லட்சத்து 5 ஆயிரத்து 669 கல்லூரி மாணவர்களுக்கும், 97 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள Incubation Centresமூலம் 74ஆயிரத்து 969 மாணவர்களுக்கும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 78ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கும் என ஆட்சி பொறுப்பேற்று, இது வரை 8லட்சத்து 98ஆயிரத்து 812இளைஞர்களுக்கு மற்றும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

படித்த இளைஞர்கள், கல்வி பயிலும் மாணவர்கள் தங்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சி வடிவமைப்புகளுக்கும் அவற்றை தயாரித்து சந்தைப்படுத்தவும் புத்தாக்க பற்று சீட்டு திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.கடந்த 2 ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ், 266புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ. 7 கோடியே 39 லட்சம் நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 101அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தொழில் வளர் காப்பகங்கள் - Incubation Centres அமைக்கப்பட்டு உள்ளது. இதில் 29இன்குபேஷன் சென்ட்டர்களில் ரூ.19 கோடியே 84லட்சம் மதிப்பீட்டில்,புதிய இயந்திரங்கள் பரிசோதனை கூடங்கள் நிறுவப்பட்டு மேம்படுத்தப்பட்டு உள்ளன.அரசின் தொழில் வளர் காப்பகங்களை பயன்படுத்தி 89மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் புதிய கண்டுபிடிப்புகளை தயாரித்து பலன் அடைந்துள்ளனர். கல்லூரி மாணவர்கள் தங்கள் மாணவ பருவத்திலேயே புதிய தொழிலை தொடங்கும் வழி முறைகளை தெரிந்து கொள்ள, தமிழகத்தில் உள்ள 1545கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள்பயன் பெறும் வகையில் 31இடங்களில் தொழில்முனைவோர் மையங்கள் Hubs அமைக்கப்பட்டு தொழில் துவங்க உதவிகளும் ஆலோசணைகளும் வழங்கப்படுகிறது. இதிலிருந்து 50மாணவர்களுக்கு ரூ.50லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களிடம் புத்தாக்க சிந்தனையை உருவாக்கிட முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு ரூ.1 கோடி மதிப்பில் “பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தினை” அறிவித்துள்ளார். இதன்படி, 4,343 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் தொழில்முனைவோர்களாக மாற விழிப்புணர்வும், ஆலோசனையும் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 40 மாணவ குழுக்களின் சிறந்த புதிய கண்டுபிடிப்புகளுக்கு தலா ரூ.25ஆயிரம் முதல் ரூ.1லட்சம் வரை ரொக்க பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற MSME தின விழாவில் முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் மாநில அளவில் வெற்றி பெற்ற 10 சிறந்த மாணவ குழுக்களுக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.10லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 1,000 இளைஞர்களுக்கு சுழற்சி முறையில் தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்க பட்டய படிப்பு வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. இதற்காக, 320 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் கிண்டி, EDII பயிற்சி நிலையம் ரூ.4கோடியே 41 லட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்டு வருகிறது. மேலும், 260 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில், EDII தலைமையிடத்தில் 10,260 சதுர அடியில் ரூ.1 கோடியே 72லட்சம் மதிப்பில் ஒரு பயிற்சி நிலையமும் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, வகுப்புகள் தொடங்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய கண்டுபிடிப்புகளை வர்த்தக ரீதியாக சந்தைப்படுத்த StartUp TN மூலம் இதுவரை SC/ST ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உட்பட 153 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ரூ.41 கோடியே 96லட்சம், பங்குகளாக முதலீடாக வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். புதிய கண்டுபிடிப்பாளர்களை ஸ்டார்ட் அப் நிறுவனங்களாகவும், ஸ்டார்ட் அப் நிறுவனங்களை MSME நிறுவனங்களாக வளர்த்தெடுக்க, MSME துறையில் 3 வகையான சுயதொழில் திட்டங்கள்செயல்படுத்தப்பட்டு வருகிறது.ஆட்சி பொறுப்பேற்று, இதுவரை ரூ. 892 கோடியே 94லட்சம் மானியத்துடன் ரூ.3 ஆயிரத்து 312 கோடியே 16 லட்சம் வங்கி கடனுதவி வழங்கப்பட்டு26 ஆயிரத்து 121 படித்த இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்தக் கண்காட்சியில் நம் மாணவர்களின் புதிய கண்டுப்பிடிப்புக்களான Self chargeableவாகனங்கள் கழிவு நீர் குழாய் அடைப்புகளை நீக்கும் கருவிகள் பூக்களின் கழிவுகளிலிருந்து உரங்கள் விவசாயிகளுக்கு உதவும்சூரிய சக்தி குளிர் பதன வாகனம் கடற்பாசியில் அழகு சாதனங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் செயற்கை உறுப்புககள் என பல்வேறு கண்டுபிடிப்புகள்காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 2G, 3G, 5Gஎன உலகம் வேகமாக முன்னேறி கொண்டுடிருக்கும் காலத்தில் நம் மாணவர்களும் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து மக்களின் தேவையினை புரிந்து தரமான பொருட்களை குறைந்த விலையில் தயாரிக்கும் வகையில் தங்களது கண்டுப்பிடிப்புகளை உருவாக்கிட வேண்டும்.அதற்காக தொடர்ந்து நீங்கள் அயராமல் உழைக்க வேண்டும். அதற்கான ஆலோசனைகள் பயிற்சிகள் நிதி உதவிகள் வழங்க அரசு தயாராக உள்ளது. ஆகவே மாணவர்கள் இளைஞர்கள் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து தமிழகத்தை முன்னேற்றப் பாதைக்கு அழைத்து செல்லுங்கள் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சிக்கு முன்பாக பரிசு பெற்ற புத்தக்க கண்டுப்பிடிப்புகளின் கண்காட்சி நடை பெற்றது. கண்காட்சினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியம் துவக்கி வைத்து அமைச்சர் பெருமக்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார்கள். நிகழ்ச்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர்/EDII இயக்குநர் செ.உமாசங்கர், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல்ராஜ், தென் சென்னை நாடாளுமன்றஉறுப்பினர் திருமதி.தமிழச்சி தங்கப்பாண்டியன், அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர்.ஆர் வேல்ராஜ், முன்னாள் EDII இயக்குநரும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ப்பு திட்ட இயக்குநர்முனைவர் ஜெ.யு. சந்திரகலா, EDII கூடுதல் இயக்குநர் முத்துராமன் மற்றும் பல்வேறு பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

### புதிய வாக்காளர்கள் சேர்த்தல் – நீக்குதல் பணிகளில்

# கரூர் மாவட்டக் கழகத்தினர் முனைப்புடன் ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழகம் வேண்டுகோள்!

கரூர், நவ. 26 - புதிய வாக்காளர்கள் சேர்த்தல் - நீக்குதல் பணிகளில் கரூர் மாவட்டக் கழகத்தினர் முனைப்புடன் ஈடுபடுமாறு கரூர் மாவட்டக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அது வருமாறு:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சரி பார்ப்பு, புதிய வாக்காளர் சேர்த்தல், நீக்குதல் பணி நவம்பர் 25, 26 ஆம் தேதிகளில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் கழகத் தோழர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலை 27.10.2023 அடிப்படையாக கொண்டு பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், BLA2, கிளைக் கழக செயலாளர்கள் சிறப்பு முகாம் நாட்களில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் தங்களை முழுமையாக கவனம் செலுத்தி, தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள பொறுப்பாளர்களுடன் இணைந்து வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

**134. அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி**

**தொகுதி தேர்தல் பார்வையாளர் : திருமதி.மீனா ஜெயக்குமார்**

வ. எண் - ஒன்றிய/ நகரம்/ பேரூர் கழகம் - ஒன்றிய/நகர/பேரூர் கழக செயலாளர்கள்/ பொறுப்பாளர்கள் - ஆய்வு பொறுப்பாளர்கள்

1. க.பரமத்தி மேற்கு ஒன்றியம் - ஆர்.இளங்கோ MLA க.பரமத்தி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் - தில்டி.செந்தில்

கரூர் மாவட்ட வர்த்தகர் அணி தலைவர்,

2. க.பரமத்தி வடக்கு ஒன்றியம் - த.கார்த்திக் க.பரமத்தி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் - சாவி கே. நல்லுசாமி

கரூர் மாவட்ட சுற்று ச் சூழல் அணி அமைப்பாளர்,

3. க.பரமத்தி தெற்கு ஒன்றியம் - கே.கருணாநிதி க.பரமத்தி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் - கலாவதி சக்திவேல்

கழக பொதுக்குழு உறுப்பினர்

4. அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம் - எம்.மணிகண்டன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் - ஆர்.ராமசாமி முன்னாள் மாவட்டக் கழக பொருளாளர்

5. அரவக்குறிச்சி மேற்கு ஒன்றியம் - எம்.எஸ்.மணியன் அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் - எஸ்.காளியப்பன் கழக பொதுக்குழு உறுப்பினர்

6. கரூர் மேற்கு ஒன்றியம் - சி.வளர்மதி கரூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் - எஸ்.மனோகரன்

கரூர் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்

7. புகழூர் நகரம் - அ.குணசேகரன், புகழூர் நகர கழக செயலாளர் - எம்.ஆர்.எஸ்.சுரேஷ்

மாவட்ட அயலக அணி அமைப்பாளர்

8. புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி - க.முரளிராஜா, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி கழக செயலாளர் - பி.எஸ். பிரதாபன், கரூர் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர்

9. அரவக்குறிச்சி பேரூராட்சி - பி.எஸ்.மணி அரவக்குறிச்சி பேரூராட்சி கழக பொறுப்பாளர் - என். எஸ்.ஆறுச்சாமி

கழக பொதுக்குழு உறுப்பினர்

10. பள்ளப்பட்டி நகரம் - அ.வாசிம்ராஜா பள்ளப்பட்டி நகர கழக பொறுப்பாளர் - பி.வி.பரத்

மாவட்ட கழக பொருளாளர்

**135. கரூர் சட்டமன்ற தொகுதி**

**தொகுதி தேர்தல் பார்வையாளர் : பனப்பட்டி கே.தினகரன்**

1. கரூர் வடக்கு ஒன்றியம் - வி.கே.வேலுச்சாமி கரூர் வடக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் - பி.விஜயக்குமார் கழக தொழிலாளர் அணி துணை செயலாளர்

2. கரூர் கிழக்கு ஒன்றியம் - ப.முத்துக்குமார், கரூர் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் - எம்.எஸ். கே.கருணாநிதி,

கரூர் மாவட்ட கழக துணை செயலாளர்

3.தாந்தோணி மேற்கு ஒன்றியம் - கே.பாஸ்கர், தாந்தோணி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் - பி.மோகனசுப்பு

கரூர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர்

4.கரூர் வடக்கு பகுதி கழகம் - கரூர் கணேசன், கரூர் வடக்கு பகுதி கழக செயலாளர் - R. G. சரவணமூர்த்தி

கரூர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்

5.கரூர் மத்திய மேற்கு பகுதி கழகம் - ஆர்.ஜோதி பாசு, கரூர் மத்திய மேற்கு பகுதி கழக பொறுப்பாளர் - சாலை கு.சுப்பிரமணி தலைமைச் செயற்குழு உறுப்பினர்

6. கரூர் மத்திய பகுதி கழகம் - வி.ஜி.எஸ்.குமார், கரூர் மத்திய பகுதி கழக பொறுப்பாளர் - எம்.சிவசாமி

கழக பொதுக்குழு உறுப்பினர்

7.கரூர் மத்திய கிழக்கு பகுதி கழகம் - ஆர்.எஸ். ராஜா கரூர் மத்திய கிழக்கு பகுதி கழக செயலாளர் - K.சுப்பிரமணியன் கரூர் மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர்

8.கரூர் தெற்கு பகுதி கழகம் - க.சுப்பிரமணியன், கரூர் தெற்கு பகுதி கழக செயலாளர் - எம். சிவக்குமார் (எ) ஜிம்.சிவா கரூர் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர்

9. கரூர் மேற்கு பகுதி கழகம் - தாரணி பி.சரவணன், கரூர் மேற்கு பகுதி கழக செயலாளர் - பி.சிவ காமசுந்தரி,

கழக பொதுக்குழு உறுப்பினர்

**36. கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி**

**தொகுதி தேர்தல் பார்வையாளர் : திருமதி.நாமக்கல் ராணி**

1. தாந்தோணி கிழக்கு ஒன்றியம் - எம்.ரகுநாதன், தாந்தோணி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் - எஸ்டேட் கே.வேலுச்சாமி கழக பொதுக்குழு உறுப்பினர்

2. உப்பிடமங்கலம் பேரூராட்சி - சி.தங்கராசு உப்பிடமங்கலம் பேரூர் கழக செயலாளர் - என். ராமலிங்கம்

கழக பொதுக்குழு உறுப்பினர்

3.புலியூர் பேரூராட்சி - கா.அம்மையப்பன், புலியூர் பேரூர் கழக செயலாளர் - எஸ்.சங்கர்

கரூர் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர்

4.கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம் - கே.வி. ராஜா கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் - இரா.பிரபு முன்னாள் மாவட்ட கழக துணை செயலாளர்

5. கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி - எம்.சசிக்குமார், கிருஷ்ணராயபுரம் பேரூர் கழக செயலாளர் - M.பிரின்சி

கரூர் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்

6. பழைய ஜெயங்கொண்டம் பேரூராட்சி - ஆர்.மோகன்ராஜ் பழைய ஜெயங்கொண்டம் பேரூர் கழக செயலாளர் - K.நந்தினி தேவி கரூர் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்

7. கடவூர் வடக்கு ஒன்றியம் - எம்.ராமலிங்கம், கடவூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் - குளித்தலை பி.பாலு

கரூர் மாவட்ட விவசாய அணி தலைவர்

8. கடவூர் தெற்கு ஒன்றியம் - கே.சுதாகர், கடவூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் - எம்.துரைராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்

9. கடவூர் மேற்கு ஒன்றியம் - என்.செல்வராஜ், கடவூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் - வெங்கமேடு கு.வடிவேல்

கரூர் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர்

**137. குளித்தலை சட்டமன்ற தொகுதி**

**தொகுதி தேர்தல் பார்வையாளர் : பரணி இ.ஏ.கார்த்திகேயன்**

1. கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம் - சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் - காலனி எஸ்.செந்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்

2. கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றியம் - எல். கரிகாலன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் - பூவை ரமேஷ்பாபு கரூர் மாவட்டக் கழக துணை செயலாளர்

3.குளித்தலை மேற்கு ஒன்றியம் - ப.தியாக ராஜன், குளித்தலை மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் - டி.ராஜேந்திரன் கரூர் மாவட்ட கழக அவைத் தலைவர்

4.குளித்தலை கிழக்கு ஒன்றியம் - அ.சந்திரன், குளித்தலை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் - பல்லவி ராஜா

கழக வர்த்தக அணி துணை செயலாளர்

5. குளித்தலை நகரம் - இரா.மாணிக்கம், MLA குளித்தலை நகர கழக செயலாளர் - S.சுதாகர்

கரூர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்,

6. மருதூர் பேரூராட்சி - இ.ரவீந்திரன் மருதூர் பேரூர் கழக செயலாளர் - வி.கருப்பண்ணன்,

கழக பொதுக்குழு உறுப்பினர்

7. நங்கவரம் பேரூராட்சி - எம்.முத்து நங்கவரம் பேரூர் கழக செயலாளர் - எம்.விக்ரம்

கரூர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்

8. தோகைமலை கிழக்கு ஒன்றியம் - ஜி.அண்ணாதுரை தோகைமலை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் - ஆர்.கருப்பையா (எ) தர்மர் கழக பொதுக் குழு உறுப்பினர்

9. தோகைமலை மேற்கு ஒன்றியம் - இ. ராமர், தோகைமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் - வி.கே.டி.ராஜ் கண்ணு கழக பொதுக்குழு உறுப்பினர்

இவ்வாறு கரூர் மாவட்ட தி.மு.க. அறிவித்துள்ளது.



திருவாரூர் மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் தமிழ்நாடு தொழில் முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, நகர்மன்றத் தலைவர் புவனப்பிரியா, துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், உறுப்பினர்கள் வாரை.எஸ்.பிரகாஷ்,டி.செந்தில் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.



கழக இளைஞரணி மாநில செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இருசக்கர வாகனத்தில் பயணிக்கும் உயிரின் பாதுகாப்பு நலன் கருதி தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர்.அசோக்குமார் ஏற்பாட்டில் தருமபுரி மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் தலைக்கவசம்,மகளிர்க்கு புடவை மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.உடன் மாநில சட்டத்துறை இணைச்செயலாளர் இரா.தாமரைச்செல்வன், மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, மாவட்ட துணைச் செயலாளர் ரேணுகாதேவி, நகர்மன்ற தலைவர் மா.லட்சுமி, எம்.ஜி.எஸ். வெங்கடேஸ்வரன், டி.ஏ.ரவி,ஹரிவிக்னேஷ் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.